**TNEB**
**எம்ப்ளாயீஸ்**
**பெடரேஷன் நியூஸ்**

மலர்- 7 ✧ இதழ்-11 ✧ ஜூன் 2025

நிர்வாக ஆசிரியர்
**அ. சேக்கிழார்**

ஆசிரியர் குழு
**சு. மணிகண்டன்**
**J.L. பாஸ்டின் ராஜ்**
**K. நாராயணமூர்த்தி**
**K. செல்வராஜூ**
**R. ஜெயராமன்**
**V. சிவராணி**

செயலாளர் (வெளியீடு)
**A. செந்தில்குமார்**

இணைச்செயலாளர்
**K. தயாநிதி**

தலைமை அலுவலக முகவரி :
TNEB எம்ப்ளாயீஸ்
பெடரேஷன்
(அங்கீகாரம் பெற்றது)
39/101, சிங்கண்ணா தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை - 600 002.
✆ : 9841446621
tnebemployeesfederation3600@gmail.com
: 9092268200
https://www.tnebfederation.org

# காலியிடங்களை நிரப்புக! களப்பணியியை செய்திடுக! வருவாயைப் பெருக்கிடுக!

ஜூலை 9 அகில இந்திய வேலை நிறுத்தத்திற்கான தயாரிப்பு பணிகள் அனைத்து மத்திய தொழிற்சங்கங்களும் துறைவாரியான சங்கங்களும் அமைப்புசாரா தொழிற் சங்கங்களும் பணிகளை முடுக்கிவிட்டுள்ளன. தமிழகத்தில் சென்னை, விழுப்புரம், திருச்சி, மதுரை, கன்னியாகுமரி, ஓசூர், திருப்பூர் என ஏழு மண்டலங்களாகப் பிரித்து கலந்துரையாடல் கூட்டங்கள் நடைபெற்று வருகிறது.

உத்திரபிரதேசத்தில் மின்விநியோக கம்பெனிகளும் தனியாருக்கு தாரை வார்க்கும் போக்கைக் கண்டித்து தொடர்ச்சியாக 200 நாட்களுக்கு மேலாக போராட்டம் நடைபெற்று வருகிறது. இதற்கு ஆதரவான பிரச்சார கூட்டங்கள் மேற்குவங்கம், பீகார், ஜார்க்கண்ட், மற்றும் ஒரிசா மாநிலங்களுக்கு கல்கத்தாவிலும், ஹரியானா, பஞ்சாப், சண்டிகர், இமாசலபிரதேசம், உத்தரகாண்ட், ஜம்மு & காஷ்மீர் மற்றும் இராஜஸ்தான் மாநிலங்களை உள்ளடக்கி சண்டிஹறிலும், மகாராஷ்டிரா மற்றும் குஜராத் மாநிலங்களுக்கு மும்பையிலும், ஆந்திரா மற்றும் தெலுங்கானா மாநிலங்களுக்கு ஹைதராபாத்திலும், அஸ்ஸாம், மேகாலயா மற்றும் திரிபுரா மாநிலங்களுக்கு ஹெளகாத்தியிலும் கருத்தரங்குகள் நடைபெற உள்ளன.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் தொடர் முயற்சியின் பலனாய் தொழில்நுட்ப உதவியாளர், உதவி பொறியாளர் நேரடி நியமனத்திற்கு TNPSC அறிவிப்பு செய்துள்ளது.

07.06.2022க்கு முன்னர் உயர் கல்வி முடித்தவர் களுக்கு (பகுதி நேர படிப்பு Engineer Diploma, Degree) உள்முகத் தேர்வில் Tech Asst, Assistant Engineer பதவிகள் அளிப்பதற்கு அரசு தரப்பிலிருந்து ஒப்புதல் பெற்று வந்துள்ளதாக தலைமை அலுவலக செய்திகள் கூறுகின்றன. இவ்வகையில் படித்துள்ள அனைவருக்கும்

(காலியிடம் அதிகம் இருப்பதால்) உள்முகத் தேர்வில் TA, AE பதவிகள் அளித்திட வேண்டும்.

களப்பணி உதவியாளர் பணியிடங்கள் 20,000க்கு மேல் உள்ள காலியிடங்களில் 10% கூட பூர்த்தி செய்திட ஒப்புதல் அளித்திடவில்லை என்ற தகவலும் வெளியாகியுள்ளது. 2000 பேருக்கு குறைவாக நியமனம் செய்தால் யானைப் பசிக்கு சோளப்பொறி உணவாகுமோ என்பதை அரசும், வாரியமும் உணர்ந்து பார்த்திடல் வேண்டும்.

களப்பணிக்கு ITI படித்தவர்கள் கொண்டும், ஒப்பந்தத் தொழிலாளர்கள் கொண்டும் காலியிடங்களை பூர்த்தி செய்திட வாரியமும் அரசும் முன்வர வேண்டும்.

31.05.2025ல் மின்சார வாரியப் பணியை நிறைவு செய்திட்ட பொதுச்செயலாளர் அவர்களுக்கு 21.06.2025 அன்று சென்னை வேப்பேரி YMCA அரங்கில் பாராட்டு விழா நடைபெற்றதில் தமிழகம் முழுவதும் திட்ட அளவிலான நிர்வாகிகளும் இணைப்பு சங்க நிர்வாகிகளும் கலந்து கொண்டும், மின்வாரிய சகோதர தொழிற்சங்கங்கள் மற்றும் மத்திய தொழிற்சங்கங்கள் சார்பாகவும் தலைவர்கள் வந்து வாழ்த்தி மகிழ்ந்தது தொழிலாளர் ஒற்றுமைக்கும், தொழிற்சங்கங்களின் ஒற்றுமைக்கும் சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

மின்வாரியத்தில் TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் தொழில் மற்றும் தொழிலாளர் நலன் பேணுவதில் அக்கறைக் கொண்டு பெரும்பான்மையான உறுப்பினர்கள் கொண்டிருக்கக் கூடிய சங்கமாக திகழ்ந்து வந்ததை உறுதிப்படுத்தும் வகையில் கடந்த 129வது வாரியக் கூட்டத்தில் முடிவெடுத்து மின்வாரியம் நமக்கு 19.06.2025ல் அங்கீகாரம் வழங்கி உத்தரவிட்டுள்ளது. அதற்குண்டான ஒப்புதலை அளித்துள்ள வாரியத் தலைவர், வாரிய உறுப்பினர்கள், அரசு தரப்பு உறுப்பினர்கள், இயக்குநர்கள், வாரிய செயலாளர், சட்டக் குழும அலுவலர்கள், செயலகப் பிரிவு அலுவலர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

வருங்காலப் பணிகளை நோக்கி பீடுநடைபோடுவோம்! 22.06.2025ல் சென்னையில் நடைபெற்ற மாநில செயற்குழுவில் நிறைவேற்றப்பட்ட மின்வாரியத்தில் தேங்கியுள்ள ஊதிய உயர்வு உள்ளிட்ட அனைத்து தீர்மானங்களையும் வென்றெடுப்போம், உண்மையும் உழைப்பும் உயர்வினை நோக்கி அழைத்து செல்லும்!

**- ஆசிரியர்**

# செயற்குழு அறிக்கை

நாள் : 23.06.2025

**வணக்கம் தோழர்களே!**

TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் மாநில செயற்குழுக் கூட்டம் 22.06.2025 காலை 10.00 மணிக்கு சென்னை-2 அண்ணாசாலையில் உள்ள சுகுணவிலாஸ் சபாவில் மாநிலத் தலைவர் தோழர் J.L. பாஸ்டின்ராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் UTUC அகில இந்திய பொதுச்செயலாளர் தோழர் அசோக்கோஷ் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார்.

தலைவர் தலைமையுரையில் 21.06.2025ல் நடைபெற்ற பொதுச்செயலாளரின் பணிநிறைவிற்கான பாராட்டு விழா சிறப்புடன் நடைபெற்றதையும், இவ்விழாவிற்கு அனைத்து கிளைகளின் பங்களிப்பும், பங்கேற்பும் பாராட்டும் விதத்தில் அமைந்திருந்ததைக் குறிப்பிட்டு அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். பாராட்டு விழாவில் மின்வாரிய சகோதர தொழிற்சங்கத் தலைவர்களும், UTUC மத்திய மாநில தலைவர்களும், மத்திய தொழிற்சங்கங்களின் தமிழக தலைவர்களும், மின்வாரிய அலுவலர்களும், எம்ப்ளாயீஸ் பெடரேஷன் மாநில மண்டல திட்ட நிர்வாகிகளும் கலந்து கொண்டு பாராட்டியதும் விழாவை மேலும் சிறப்படையச் செய்தது என்றும் குறிப்பிட்டார்.

கடந்த செயற்குழுவிற்கு பின்னர் நடைபெற்ற பணிகளில் கிளைகளின் செயல்பாடுகள் சிறப்புடன் அமைந்துள்ளதை குறிப்பிட்டு பேசியதுடன் 20.06.2025ல் மின்சார வாரியம் எம்ப்ளாயீஸ் பெடரேஷனுக்கு அங்கீகாரம் வழங்கிய உத்தரவினை மதிப்பிற்குரிய மின்வாரியத் தலைவர் அவர்களின் கரங்களால் பெற்றுக் கொண்டதையும் குறிப்பிட்டு மின்சார வாரியத் தலைவர் அவர்களுக்கும், இதர அலுவலர்களுக்கும், மின்வாரிய மேனாள் தலைவர்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

பொதுச்செயலாளர் தனது உரையில் நமது எம்ப்ளாயீஸ் பெடரேஷன் அங்கீகரிக்கப்பட்ட சங்கமாக உத்தரவு வெளியிடுவதற்கு ஒப்புதல் அளித்துள்ள வாரியக் கூட்டத்தின் உறுப்பினர்களான வாரியத் தலைவர், இயக்குநர்கள், அரசு தரப்பு இயக்குநர்கள் மற்றும் வாரிய செயலாளர், சட்ட குழும அலுவலர்கள், செயலகப் பிரிவு அலுவலர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார்.

மே 20 வேலை நிறுத்தம் ஒத்தி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஜூலை 9ல் வேலை நிறுத்தம் செய்வதற்குண்டான தயாரிப்பு பணிகளில் UTUCயில் முக்கிய பங்கு வகிக்கும் நமது கிளை நிர்வாகிகளின் பங்களிப்பு குறித்தும், புதுதில்லியில் நடைபெற்ற NCCOEEE கூட்ட முடிவுகளையும் விளக்கிக் கூறினார்.

கடந்த செயற்குழுவிற்கு பின்னர் நடைபெற்ற பணிகள் குறித்தும், கூட்டங்கள் குறித்தும் பேசியதுடன் வாரியம் TA, AE நேரடித் தேர்வுக்கு TNPSC மூலம் அறிவிப்பு வெளியிட்டுள்ளதுபோல் ITI படித்த இளைஞர்களை பணிக்கு அமர்த்திட வாரியம் முன் வரவேண்டுமென்றும், உள்முகத் தேர்வு விரைவில் நடைபெறுவதற்கு அரசு தரப்பிலிருந்து கருத்துரு பெறப்பட்டுள்ளதாக வாரியத்தின் செய்தியையும் பகிர்ந்ததுடன் அடிப்படை பதவிகளை நிரப்புவதில் விடுபட்ட கேங்மேன் 5000 பேருக்கும் வாரியம் வேலை வழங்கிட வேண்டுமென்றும் குறிறப்பிட்டு பேசினார்.

பொருளாளர் 21.06.2025ல் பொதுச் செயலாளர் மின்வாரியப் பணி நிறைவுக்கு பாராட்டு விழா சிறப்புடன் நடைபெற்றதையும், இதற்காக ஒத்துழைத்த அனைத்து கிளைகளும் நன்றி தெரிவித்தும், அடுத்த இலக்காக கட்டிட நிதியை தீவிரப்படுத்திடவும் கேட்டுக் கொண்டார்.

மாநில தலைமை நிர்வாகிகள் செயல்தலைவர் S. இராசாங்கம், அமைப்பு செயலாளர், G.K. பாலகிருஷ்ணன், துணை பொதுச்செயலாளர்கள் K. நாராயணமூர்த்தி, S. மணிகண்டன் ஆகியோர்களின் உரைக்குப் பின்னர் செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்ட விவாதத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## தீர்மானங்கள்

**1) TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷனுக்கு அங்கீகாரம் வழங்கிட வாரியக் கூட்டத்தில் முடிவெடுத்து உத்தரவு அளித்துள்ளதை பாராட்டி இச்செயற்குழு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.**

**2) 01.12.2023 முதல் வழங்கிட வேண்டிய ஊதிய உயர்வுக்கான பேச்சுவார்த்தையை உடனடியாக தொடங்கிட வேண்டும் என்றும் இடைக்கால நிவாரணமாக ரூ. 5000/- வழங்கிட வேண்டுமெனவும் வேலைப்பளு பேச்சுவார்த்தையும் இணைத்து பேசிட வேண்டும் எனவும் மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.**

**3) கேங்மேன் பணியாளர்களுக்கு களஉதவியாளர் பெயர் மாற்றம் செய்திட வேண்டுமாய் மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.**

**4) களப்பணி உதவியாளர் காலிப் பணியிடங்களில் ITI படித்த இளைஞர்களை TNPSC மூலம் தேர்வு செய்திட வேண்டுமாய் மின்சார வாரியத்தை இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.**

**5) மின்சார வாரியத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கும் ஒப்பந்தத் தொழிலாளர்களையும், பகுதி நேரப் பணியாளர்களையும் நிரந்தரம் செய்திட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.**

**6) விடுபட்ட கேங்மேன் 5000 பேரையும் பணியிலமர்த்திட மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.**

**7) Technical Assistant, Assistant Engineer, Store Custodian II Grade பதவிகளுக்கு உள்முகத் தேர்வினை உடனடியாக வெளியிட வேண்டுமென மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.**

**8) Accounts Supervisor, Asst Accounts Officer, Sr. ATO, ATO, RS, IA மற்றும் Junior Engineer II & I Grade (Mechanical), பதவி உயர்வுகளை விரைவாக வழங்கிட வேண்டுமாய் மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.**

**9) தூத்துக்குடி மின்வட்டத்தில் SNLI பதவி உயர்வு அளித்துள்ளது தொடர்பாக உள்ள குளறுபடிகளை உடனடியாக சரி செய்திட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.**

10) மதுரை மாநகர் மின்வட்ட மதுரை தெற்கு கோட்ட செயற்பொறியாளர் மீது மதுரை மின்வட்ட தொழிற்சங்க கூட்டு நடவடிக்கை குழுவின் புகாரின் மீது உரிய நடவடிக்கையை மேற்கொள்ள உத்தரவிடுமாறு மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

11) பொன்னாபுரம் 200 KV துணை மின்நிலைய செயற்பொறியாளர் உடுமலை மரபுசாரா எரிசக்தி மற்றும் ஆதாரங்கள் வட்ட செயலாளருக்கு அளித்துள்ள குறிப்பாணையை திரும்பப் பெறவில்லையென்றால் செயற்பொறியாளர் மீது நடவடிக்கை எடுத்திட வலியுறுத்தி அனைத்து கிளைகளிலும் ஒரே நாளில் ஒரே நேரத்தில் ஆர்ப்பாட்டம் நடத்திடுவது என இச்செயற்குழு தீர்மானிக்கிறது.

12) அங்கீகாரம் வழங்கிய நிர்வாகத்திற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் 24.06.2025 அன்று அனைத்து கிளைகளிலும் செய்தியை பதாகையில் வெளியிட்டு இனிப்பு வழங்கிடுவதென இச்செயற்குழு முடிவு செய்கிறது.

13)

| | | | |
|---|---|---|---|
| i) | கள்ளக்குறிச்சி மின்வட்டம் | - | K. பஞ்சமூர்த்தி, மாநில செயலாளர் |
| ii) | வேலூரன் மின்வட்டம் | - | R. ஜெயராமன், மாநில உபதலைவர் |
| iii) | நீலகிரி மின்வட்டம் | - | J.L. பாஸ்டின்ராஜ், மாநில தலைவர் |
| iv) | விழுப்புரம் மின்வட்டம் | - | K. பஞ்சமூர்த்தி, மாநில செயலாளர் |
| v) | கடலூர் மின்வட்டம் | - | K. செல்வராஜ், மாநில செயலாளர் |
| vi) | புதுக்கோட்டை மின்வட்டம் | - | R. சிவசெல்வம், மாநில செயலாளர் |
| vii) | திருப்பத்தூர் மின்வட்டம் | - | S. கண்ணையன், மாநில உபதலைவர் |

ஆகியோரை மேலிடப் பார்வையாளராக நியமிப்பதென ஏகமனதாக இச்செயற்குழு முடிவு செய்கிறது.

14) 2025 ஜூலை 9 அகில இந்திய வேலை நிறுத்தத்தில் முழுமையாக பங்கெடுப்பது என செயற்குழு தீர்மானிக்கிறது.

செயற்குழு தீர்மானங்களை முழுமையாக நடைமுறைப்படுத்திட ஆலோசனைகள் வழங்கிய தலைவர் உரையுடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள,

(A. சேக்கிழார்)

பொதுச்செயலாளர்

நாள் : 23.06.2025

இடம் : சென்னை-600 002.

©
தமிழ்நாடு அரசு
2025

கையெழுத்துத் தொடர்

## நிதி (ஓய்வூதியம்) துறை

**அரசாணை எண். 120, நாள்: 22.05.2025**

(வைகாசி - 8, திருவள்ளுவர் ஆண்டு 2056)

**சுருக்கம்**

பொங்கல் பண்டிகை - ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் மற்றும் முன்னாள் கிராம அலுவலர்களுக்கு பொங்கல் பரிசு வழங்குதல் - ஆணைகள் - வெளியிடப்படுகின்றன.

---

படிக்கப்பட்டது:-

அரசாணை (நிலை) எண். 2, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள்: 02.01.2010.

★★★

**ஆணை**

பார்வையில் காணும் அரசாணையில் ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கான பொங்கல் பண்டிகை பரிசுத்தொகை 300 ரூபாயிலிருந்து 500 ரூபாயாக உயர்த்தி வழங்கிட ஆணை வழங்கப்பட்டது.

2. மாண்புமிகு முதலமைச்சர் 28.04.2025 நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண். 110-இன் கீழ் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

> ‘‘தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகைக்கு முன்னாள் கிராம பணியமைப்பு உட்பட "C" மற்றும் "D" பிரிவு ஓய்வூதியதாரர்கள், அனைத்து வகை தனி ஓய்வூதியதாரர்கள் மற்றும் அனைத்துக் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு தமிழ்நாடு அரசால் ஆண்டுதோறும் வழங்கப்படும் பரிசுத் தொகை ஐந்நூறு ரூபாயிலிருந்து ஆயிரம் ரூபாயாக இனி உயர்த்தி வழங்கப்படும். இந்த உயர்வால் சுமார் நான்கு இலட்சத்து எழுபத்து ஓராயிரம் ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவார்கள். இதனால் அரசிற்கு ஏற்படும் கூடுதல் செலவினம் சுமார் 24 கோடி ரூபாயாக இருக்கும்.’’

3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 28.04.2025 நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண். 110-இன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கிணங்க, முன்னாள் கிராம பணியமைப்பு உட்பட "C" மற்றும் "D" பிரிவு ஓய்வூதியதாரர்கள், அனைத்து வகை தனி ஓய்வூதியதாரர்கள் மற்றும் அனைத்து குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு பொங்கல் பண்டிகை பரிசுத்தொகை 500 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாக உயர்த்தி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**த. உதயச்சந்திரன்**
அரசு முதன்மைச் செயலாளர்

©
தமிழ்நாடு அரசு
2025

கையெழுத்துத் தொடர்

# நிதி (ஓய்வூதியம்) துறை

**அரசாணை எண். 121, நாள்: 22.05.2025**

(வைகாசி - 8, திருவள்ளுவர் ஆண்டு 2056)

**சுருக்கம்**

முன்பணம் - ஓய்வூதியதாரர்களுக்கான பண்டிகை முன்பணம் - பண்டிகை கால முன்பணத்தை உயர்த்தி வழங்குதல் - ஆணைகள் - வெளியிடப்படுகின்றன.

---

படிக்கப்பட்டது:-

1. அரசாணை (நிலை) எண். 285, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள்: 18.02.1971.
2. அரசாணை (நிலை) எண். 836, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள்: 31.07.1976.
3. அரசாணை (நிலை) எண். 241, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள்: 02.08.2019.

★★★

**ஆணை**

மேலே முதலாவதாக மற்றும் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில் தமிழ்நாடு அரசு மாநில சிவில் மற்றும் ஆசிரியர் ஓய்வூதியதாரர்களுக்கு பண்டிகை கால முன்பணம் வழங்க சில நிபந்தனைகளும், திருத்தங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

2. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாடு அரசு மாநில சிவில் மற்றும் ஆசிரியர் ஓய்வூதியதாரர்களுக்கு பண்டிகை கால முன்பணம் 2,000 ரூபாயிலிருந்து 4,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

3. மாண்புமிகு முதலமைச்சர் 28.04.2025 நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண். 110-இன் கீழ் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

> ஓய்வூதியதாரர்கள் அவர்தம் குடும்பத்தினருடன் பண்டிகையைச் சிறப்பாகக் கொண்டாடிட, தற்போது வழங்கப்படும் பண்டிகை கால முன்பணம், நான்காயிரம் ரூபாயிலிருந்து ஆறாயிரமாக உயர்த்தி வழங்கப்படும். இந்த உயர்வால், சுமார் 52 ஆயிரம் ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவர். இதனால் பத்து கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்.

4. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 28.04.2025 நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண். 110-இன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கிணங்க தமிழ்நாடு அரசு மாநில சிவில் மற்றும் ஆசிரியர் ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பண்டிகை முன்பணத்தை 4,000 ரூபாயிலிருந்து 6,000 ரூபாயாக (ரூபாய் ஆறாயிரம் மட்டும்) உயர்த்தி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. இந்த பண்டிகை முன்பணம் உயர்வு இவ்வாணை வெளியிடப்படும் நாள் முதல் நடைமுறைக்கு வரும். இந்த ஆணை வெளியிடப்பட்ட நாளுக்கு பிறகு கொண்டாடப்படும் பண்டிகைகளுக்கு பொருந்தும். இப்பண்டிகை முன்பணமானது பத்து மாதங்களுக்கு சமமான தவணைகளில் பிடித்தம் செய்யப்படும்.

6. மேலே முதலாவதாக மற்றும் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில் வெளியிடப்பட்ட மற்ற நிபந்தனைகளை பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**த. உதயச்சந்திரன்**
அரசு முதன்மைச் செயலாளர்

# 2025 ஜூலை 9 பொது வேலை நிறுத்தம் தயாரிப்பு பணிகளை விரைவுபடுத்துவோம் அனைத்து தொழிற்சங்க கூட்ட முடிவுகள்

03.06.2025

**அன்புக்குரிய தோழர்களே, வணக்கம்.**

தமிழ்நாட்டில் அனைத்து தொழிற்சங்கங்களின் கூட்டம் 02.06.2025 காலை 12.00 மணிக்கு சென்னை, தி.நகர், ‘‘கலைஞரகம்’’ தொமுச அலுவலகத்தில் தொமுச தலைவர் தோழர் கி. நடராசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தோழர்கள், கோ.சி. வள்ளுவன், ஜெ. விஜயகுமார், ஆ.சீ. அருணகிரி, (தொமுச) ம. இராதாகிருஷ்ணன், எஸ். காசிவிஸ்வநாதன் (ஏஐடியுசி), ஜி. சுகுமாறன் (சிஐடியு) மா. சுப்ரமணியபிள்ளை (எச்எம்எஸ்) டி.வி. சேவியர் பா. சுகுமாரன் (ஐஎன்டியுசி) வி.சிவகுமார், ஈ. சடையாண்டி (ஏஐடியூசி) ஏ.எஸ். குமார் (ஏஐசிசிடியு) அ.சேக்கிழார், (யுடியுசி) எஸ். மாயாண்டி, (டியுசிசி), கி. வெங்கடேசன் (எம்எல்எப்) இரா. சம்பத் (டபுள்யுபிடியுசி) க. பேரறிவாளன் (எல்எல்எஃப்) உள்ளிட்ட தொழிற்சங்க தலைவர்கள் பங்கேற்றனர்.

ஜூலை 9ஆம் தேதி பொது வேலை நிறுத்தம் தமிழ்நாட்டில் முழு வெற்றி பெறச் செய்வதற்கான மே 20ஆம் ஆர்ப்பாட்டம் ஜுன் 2ஆம் தேதி ஆலை வாயில் மற்றும் பரப்புரை இயக்கங்களை சிறப்பாக நடத்திய, பங்கேற்ற அனைத்து தோழர்களுக்கும் பாராட்டுதல்களை தெரிவிக்கிறோம். தமிழ்நாட்டில் பொது வேலை நிறுத்தம் முழு வெற்றி பெறச் செய்வதற்குரிய வகையில் அனைத்து தொழிற்சங்கங்களின் மாநில நிர்வாகிகள் அரசியல் கட்சிகளின் தலைவர்களை சந்தித்து ஆதரவளிக்க கேட்டுக் கொண்டுள்ளனர். அரசியல் கட்சிகள் முழுமையான ஆதரவளிப்பதாக தெரிவித்துள்ளனர்.

கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் வருமாறு:

பொது வேலை நிறுத்தம் ஜூலை 9ஆம் தேதிக்கு மாற்றியமைக்கப்பட்டதால் ஏற்கனவே வழங்கப்பட்ட வேலை நிறுத்த அறிவிப்பு நோட்டீஸை மறு அட்டவணை (Reschedule) அறிவிப்பு வழங்காத சங்கங்கள் உடனடியாக வழங்க வேண்டும்.

**ஜுன் 15-20 மண்டல கலந்துரையாடல் கூட்டங்கள்:**

2025 ஜுன் 15 முதல் 20ஆம் தேதிக்குள்ளாக கீழ்காணும் அடிப்படையில் மண்டல அளவிலான கலந்துரையாடல் கூட்டங்களை நடத்த வேண்டும். கூட்டம் நடைபெறும் இடம், தேதி, நேரம் ஆகியனவற்றை கூட்டம் நடைபெறும். மாவட்டம் நிச்சயித்து தகவல் தர வேண்டும். இக்கூட்டங்களில் பங்கேற்க வேண்டிய மாவட்டங்களின் அனைத்து சங்க மாவட்ட நிர்வாகிகள் பங்கேற்க வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலும் திட்டமிடப்பட்ட பணிகள் நடைபெற்றுள்ள பணிகள் குறித்து விவாதித்து முடிவெடுக்கும் வகையில் இக்கூட்டம் நடைபெறும்.

| எண். | இடம் | பங்கேற்க வேண்டிய மாவட்டங்கள் |
|---|---|---|
| 1. | சென்னை | சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை |
| 2. | விழுப்புரம் | விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி |
| 3. | திருச்சி | திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருவாரூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், அரியலூர், பெரம்பலூர், கரூர் |

| | | |
|---|---|---|
| 4. | திருப்பூர் | திருப்பூர், கோவை, நீலகிரி, ஈரோடு |
| 5. | ஓசூர் | கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல் |
| 6. | மதுரை | மதுரை, தேனி, திண்டுக்கல், விருதுநகர், ராமநாதபுரம், சிவகங்கை |
| 7. | கன்னியாகுமரி | குமரி, நெல்லை, தூத்துக்குடி, தென்காசி |

**ஜுன் 15-20 துறை ரீதியான கூட்டங்கள்**

2025 ஜுன் 15 முதல் 20ஆம் தேதிக்குள் துறைரீதியாக கூடி பொது வேலை நிறுத்த தயாரிப்பு நடவடிக்கைகள் குறித்து திட்டமிடாத துறையின் கூட்டங்கள் நடத்தி திட்டமிட வேண்டும்.

**சாத்தியமான நாட்கள் விரிவான பரப்புரை:**

மாவட்டங்களில் உடனடியாக கூடி கோரிக்கைகளும், ஜுலை 9 பொது வேலை நிறுத்த செய்தியும் ஒவ்வொரு தொழிலாளியையும், பொதுமக்களையும் சென்றடையும் வகையில் வாயில் கூட்டங்கள், தெருமுனை கூட்டங்கள் மற்றும் பாதயாத்திரை ஜீப்/சைக்கிள் இருசக்கர வாகன யாத்திரை போன்ற வடிவங்களிலும் எத்தனை நாட்கள், என்னென்ன வடிவங்கள் என்று மாவட்டங்களில் விரிவான பரப்புரை மேற்கொள்ள திட்டமிட வேண்டும். மே 20 பொது வேலை நிறுத்த பரப்புரைக்கு அச்சிடப்பட்ட துண்டறிக்கைகள், சுவரொட்டிகள் இருப்பின் அதனையும் தேதியை ஜுலை 9 என்று மாற்றி பயன்படுத்தலாம்.

**ஜுன் 24ஆம் தேதி கூட்டம்**

நடைபெற்ற பணிகளை பரிசீலித்து அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து திட்டமிட 2025 ஜுன் 24 அன்று மாலை 4.00 மணிக்கு உழைக்கும் மக்கள் மாமன்ற அலுவலகத்தில் அனைத்து தொழிற்சங்கங்களின் கூட்டம் நடைபெறும்.

தோழர்களே, திட்டமிட்டு முடிவுகளை அமுலாக்க தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், நடந்த விவரங்களை மாநில தலைமைக்கு தெரிவிக்கவும் வேண்டுகிறோம்.

தோழமையுடன்,

மு.சண்முகம்,எம்.பி. **LPF**
க.அ.ராஜாஸ்ரீதர் **HMS**
ம.இராதாகிருஷ்ணன் **AITUC**
ஜி.சுகுமாறன் **CITU**
டி.வி.சேவியர் **INTUC**

வி.சிவகுமார் **AIUTUC**
சொ.இரணியப்பன் **AICCTU**
அ.சேக்கிழார் **UTUC**
எஸ்.மாயாண்டி **TUCC**

ஆர்.சம்பத் **WPTUC**
இரா.அந்திரிதாஸ் **MLF**
க.பேரறிவாளன் **LLF**

## போக்குவரத்துத் துறையில் ஊதிய உயர்வு ஒப்பந்தம்

**தொழிற்தாவா பற்றிய சுருக்கக் குறிப்பு (Short Recital of the Case)**

போக்குவரத்துக் கழக தொழிலாளர்களுக்கு தொழிற்தகராறு சட்டம் 1947 பிரிவு 12(3)-ல் ஊதியம் மற்றும் அதைச் சார்ந்த பணி நிலைமையைக் குறித்து தொழிற்சங்கப் பிரதிகளுடன் பேச்சுவார்த்தை மூலம் கலந்து பேசி ஊதிய ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. இந்நிலையில் முந்தைய 14-வது ஊதிய ஒப்பந்தமானது 24.08.2022 அன்று கையெழுத்தானது. இந்நிலையில் மேற்படி ஒப்பந்தம் 31.08.2023 அன்று முடிவடைவதால் 15-வது ஊதிய ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தையினை உடனடியாக துவங்குமாறு பல்வேறு தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்தன. இதனைத் தொடர்ந்து, அரசால் 14 உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாகக் குழுவை அரசு ஆணை (ப) எண். 06, போக்குவரத்து (சி1) துறை, நாள்: 05.02.2024 மூலமாகவும் மற்றும் 5 உறுப்பினர்கள் கொண்ட துணைக் குழு, அரசு ஆணை (ப) எண். 07, போக்குவரத்து (சி1) துறை, நாள்: 20.02.2024 மூலமாகவும் அமைக்கப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் மற்றும் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் (போக்குவரத்துத் துறை) ஆகியோர் முன்னிலையில் மேற்படி குழு மற்றும் துணைக்குழுவுடனும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடனும் பல்வேறு கட்டங்களாக பேச்சுவார்த்தைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நாட்களில் நடைபெற்றது.

| வ. எண் | 15-வது ஊதிய ஒப்பந்த பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டவர்கள் | பேச்சுவார்த்தை நடைபெற்ற தேதி |
|---|---|---|
| அ) | மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தை கூட்டங்கள் | 13.02.2025, 14.02.2025 |
| ஆ) | அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் (போக்குவரத்துத் துறை) அவர்கள் தலைமையில் தொழிற்சங்கப் பிரதிநிதி களுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தை கூட்டங்கள் | 27.08.2024 |

இதனைத் தொடர்ந்து 29.05.2025 அன்று மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில், சென்னையில், தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக நிர்வாகங்களுக்கும் இடையே நடைபெற்ற கலந்துரையாடலுக்குப் பின்பு ஒரு நல்ல சுமூகமான உடன்பாடு எட்டப்பட்டது.

இதனை அடுத்து, தொழிலாளர் தனி இணை ஆணையர், சென்னை அவர்களின் முன்னிலையில் இன்று (29.05.2025) தொழிற்தகராறுகள் சட்டம் 1947 பிரிவு 12 (3)-ன் கீழ் (தற்பொழுது உச்ச நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்குகளின் இறுதி தீர்ப்புக்கு உட்பட்டு (Subject to the result of the Civil Appeal No. 16146/2010 (31574/2010) மற்றும் இதர சட்டப்படியான நடைமுறைகளுக்கு உட்பட்டு) இந்த சமரச ஒப்பந்தம் ஏற்பட்டது.

**ஒப்பந்த சரத்துகள் (Terms of Settlement)**

**1. அடிப்படை ஊதிய நிர்ணயம்**

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் 01.09.2023 அன்று பணிபுரியும் நிரந்தர தொழிலாளர்களுக்கு (Permanent Employees as on 01.09.2023) கீழ்கண்டவாறு அடிப்படை ஊதியம் 01.09.2023 முதல் நிர்ணயம் செய்யப்படும்.

31.08.2023 அன்று அவர்கள் பெற்று வந்த அடிப்படை ஊதியத்தில் 6% உயர்வு அளித்து கணக்கீடு செய்து புதிய அடிப்படை ஊதியம் நிர்ணயம் செய்யப்படும்.

**2. அகவிலைப்படி (Dearness Allowance)**

தற்போது மாற்றியமைக்கப்பட்ட அடிப்படை ஊதியத்தின் அடிப்படையில் அகவிலைப்படி நடைமுறையில் உள்ளவாறு தொடர்ந்து வழங்கப்படும்.

**3. ஆய்வு பலன் (Review Benefit)**

முந்தைய ஒப்பந்தத்தின்படி நடைமுறையில் உள்ள 6+7+7+7+5 வருடங்கள் இடைவெளிக்கு ஒரு ஆய்வு பலன் என்பது தகுதியின் அடிப்படையில் தொடர்ந்து வழங்கப்படும். இதில் முதல் மூன்று ஆய்வுகளுக்கு 5% ஊதிய உயர்வும், அடுத்த இரண்டு ஆய்விற்கு 3% ஊதிய உயர்வும் வழங்கி வருவதில் எந்தவிதமான மாற்றமும் இல்லை.

**4. ஓய்வுதாரர் இலவச பயண அட்டை**

அ) முந்தைய ஒப்பந்தத்தின்படி, ஓய்வு பெற்ற போக்குவரத்துக் கழக தொழிலாளர்களக்கும் அவர்கள் துணைவியருக்கும் வழங்கப்பட்டு வரும் சலுகைக்கான இலவச பேருந்து பயண அட்டை தொடர்ந்து வழங்கப்படும்.

ஆ) மேற்கண்ட சலுகையான இலவச பேருந்து பயண அட்டை இறந்த தொழிலாளர்களின் துணைவியருக்கும் (Spouse) வழங்கப்படும்.

இ) மேற்கண்ட சலுகையான இலவச பேருந்து பயண அட்டை மருத்துவ அடிப்படையில் விடுவிக்கப்பட்ட பணியாளர்களுக்கும் அவர்கள் துணைவியாருக்கும் (Spouse) வழங்கப்படும்.

மேற்கண்ட சலுகைகள் அரசு விரைவு போக்குவரத்துக் கழக பேருந்துகள், குளிர்சாதன பேருந்துகள் மற்றும் முன்பதிவு செய்யும் பேருந்துகள் ஆகியவைகள் நீங்கலாக வழங்கப்படும்.

**5. ஆண்டு ஊதிய உயர்வு (Annual Increment)**

தற்போதுள்ள நடைமுறைப்படி வருடாந்திர ஊதிய உயர்வு 3% என்பது தொடர்ந்து வழங்கப்படும்.

**6. வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி மற்றும் மருத்துவப்படி**

தற்போது மாதம் ஒன்றுக்கு வழங்கப்பட்டு வரும் வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி, மருத்துவப்படி இணைப்பு I மற்றும் II-ல் கண்ட அட்டவணைப்படி தொடர்ந்து வழங்கப்படும்.

**7. மலைவாழ்படி**

மோட்டார் வாகனப் போக்குவரத்து தொழிலாளர் சட்டத்தில், மலைப்பகுதி என்று அறிவித்துள்ள இடங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு மலைவாழ்படி மாதம் ஒன்றுக்கு ரூ. 3,000/- என்பதை ரூ. 4,000/- ஆக உயர்த்தி வழங்கப்படும்.

**குளிர்பிரதேசப்படி**

பொருத்தமான பணியிடங்களில் தகுதியுள்ள பணியாளர்களுக்கு குளிர்பிரதேசப்படி மாதம் ரூ. 500/- நடைமுறையில் உள்ள விதிகளின்படி தொடர்ந்து வழங்கப்படும்.

**8. சலவைப்படி**

தற்பொழுது மாதம் ஒன்றுக்கு வழங்கப்பட்டு வரும் சலவைப்படி ரூ. 140/- என்பதை ரூ. 160/- ஆக உயர்த்தி வழங்கப்படும்.

**9. வருகைப்பயன் (Attendance Benefit)**

தற்போது மாதம் ஒன்றுக்கு வழங்கப்பட்டு வரும் வருகைப்பயன் (Attendance Benefit) தொகையான ரூ. 50/- விதிமுறைகளுக்குட்பட்டு தொடர்ந்து வழங்கப்படும்.

**10. தனி பேட்டா**

தற்போது போக்குவரத்துப் பிரிவில் ஒரு ஷிப்டுக்கு தனி பேட்டாவாக வழங்கப்படும் ரூ. 16/- என்பதை ரூ. 21/- ஆக உயர்த்தி விதிமுறைகளுக்குட்பட்டு வழங்கப்படும். குறிப்பாக சாதாரண நகரப் பேருந்துகளுக்கு தற்போது வழங்கப்படும் தனி பேட்டா ஒரு ஷிப்டுக்கு ரூ. 18/-லிருந்து ரூ. 23/- ஆக உயர்த்தி வழங்கப்படும்.

**11. ரிஸ்க் மற்றும் ஷிப்ட் அலவன்ஸ்**

தற்போது வழங்கப்பட்டு வரும் ரிஸ்க் மற்றும் ஷிப்ட் அலவன்ஸ் ரூ. 9/-லிருந்து ரூ. 14/- ஆக உயர்த்தி விதிமுறைகளுக்குட்பட்டு வழங்கப்படும்.

**12. ஸ்டியரிங் அலவன்ஸ்**

போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் ஓட்டுநர்களுக்கு கி.மீ. அடிப்படையில் படிமுறை விகிதத்தில் (Slab) தற்போது பெற்று வரம் ஸ்டியரிங் அலவன்ஸ் ரூ. 8/-லிருந்து ரூ. 13/- ஆக உயர்த்தி ஏற்கனவே உள்ள விதிமுறைகளுக்குட்பட்டு வழங்கப்படும்.

**13. ரீபில் அலவன்ஸ்**

மாதம் சம்பளத்துடன் நடத்துநர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ரீபில் அலவன்ஸ் தொகை, மாதம் ரூ. 15/- என்பது விதிமுறைகளுக்குட்பட்டு தொடர்ந்நது வழங்கப்படும்.

**14. இரவு பணிப்படி**

அ) இரவு நேரத்தில் குறைந்தது எட்டு மணி நேரம் பணிபுரியும் ஒவ்வொரு பணியாளருக்கும் தற்போது உள்ள சலுகைகளுடன் (தேநீர், பன், ரொட்டி) வழங்கப்பட்டு வரும் இரவு பணிப்படி ஒரு நபருக்கு ஒரு இரவு பணிக்கு ரூ. 35/- என்பதை ரூ. 40/- ஆக உயர்த்தி வழங்கப்படும்.

இரவு பணி ஷிப்ட் நிர்ணயிக்கின்றபொழுது, அந்தந்த மேலாண் இயக்குநர்கள் சம்மந்தப்பட்ட போக்குவரத்துக் கழக தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்து பேசி இரவு பணி நேரத்தை நிர்ணயிக்க வேண்டும்.

ஆ) இரவு தடத்தில் பணிபுரியும் பயணச்சீட்டு ஆய்வாளர்கள் ஒரு இரவு பணிக்கு தற்போது பெற்று வரும் இரவு பணிப்படி ரூ. 35/-லிருந்து ரூ. 40/- ஆக உயர்த்தி வழங்கப்படும்.

**15. இரவு தங்கல் படி**

பணி நிமித்தமாக பணிபுரியும் பணிமனை அல்லாமல், வேறு இடத்தில் இரவு தங்கல் செய்யும் பணியாளர்களுக்கு கீழ்க்கண்டவாறு இரவு தங்கல் படி வழங்கப்படும்.

1) தமிழ்நாடு, புதுச்சேரி மாநிலங்களில் ஓய்வறை வசதி உள்ள இடங்களில் தற்போது வழங்கப்பட்டு வரும் இரவு தங்கல்படி ரூ. 29/-லிருந்து ரூ. 34/- ஆகவும், ஓய்வறை வசதியில்லாத இடங்களில் தற்போது வழங்கப்பட்டு வரும் இரவு தங்கல்படி ரூ. 30/-லிருந்து ரூ. 35/-ஆகவும் உயர்த்தி வழங்கப்படும்.

2) தமிழ்நாடு, புதுச்சேரி நீங்கலாக மற்ற மாநிலங்களில் இரவு தங்கும் பணியாளர்களுக்கு ஓய்வறை வசதி செய்யப்பட்ட இடங்களில் தற்போது பெற்று வரும் இரவு தங்கல்படி ரூ. 31/-லிருந்து ரூ. 36/- ஆகவும், ஓய்வறை வசதி இல்லாத இடங்களில் தற்போது வழங்கப்பட்டு வரும் இரவு தங்கல்படி ரூ. 32/-லிருந்து ரூ. 37/-ஆகவும் உயர்த்தி வழங்கப்படும்.

3) மலை / குளிர் பிரதேசங்களில் ஓய்வறை வசதியுள்ள இடங்களில் தங்கினால் தற்போது பெற்று வரும் இரவு தங்கல் படி ரூ. 26/-லிருந்து ரூ. 31/-ஆகவும், ஓய்வறை வசதியில்லாத இடங்களில் தற்போது பெற்று வரும் இரவு தங்கல்படி ரூ. 32/-லிருந்து ரூ. 37/-ஆகவும் உயர்த்தி வழங்கப்படும்.

### 16. ஊக்கத்தொகை (இன்சென்டிவ்)

ஊக்கத்தொகை (இன்சென்டிவ்) அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் ஒரே முறையில் கணக்கீடு செய்து தொழில்நுட்பம் மற்றும் நிர்வாக பணியாளர்களுக்கு வழங்குவது தொடர்பாக குழு அமைத்து நடவடிக்கை எடுக்கப்படும். குறைந்தபட்சத் தொகையாக நாளொன்றுக்கு ரூ. 6/-லிருந்து ரூ. 20/- ஆக உயர்த்தி வழங்கப்படும்.

### 17. தையற்கூலி

சீருடையுடன் தையற்கூலி ஆண்டொன்றுக்கு கீழ்க்கண்டவாறு உயர்த்தி வழங்கப்படும்.

1) ஆண் தொழிலாளர்களுக்கு ரூ. 400/-லிருந்து ரூ. 500/- ஆக உயர்வு
2) பெண் தொழிலாளர்களுக்கு ரூ. 300/-லிருந்து ரூ. 350/- ஆக உயர்வு
3) மேற்பார்வையாளர்களுக்கு ரூ. 400/-லிருந்து ரூ. 500/- ஆக உயர்வு

### 18. மேல்முறையீடு

தொழிலாளர்களுக்கு அவர்களது பணிக்காலத்தில் வழங்கப்பட்ட தண்டனை குறித்த மேல்முறையீடு 90 நாட்களுக்குள் செய்யப்பட வேண்டும் என்பதை ஒரு முறை தளர்த்தி 30.06.2025க்குள் மேல்முறையீடு செய்து கொள்ள அனுமதிக்கப்படுகிறது. குற்றத்தின் தன்மைக்கு ஏற்ப பரிசீலித்து, உரிய ஆணைகள் வழங்கப்படும் நாளிலிருந்து பணப் பலன்கள் வழங்கப்படும்.

### 19. நிலையாணை (Standing Order)

அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் ஒரே வழிகாட்டுதலுக்கான நிலையாணையை (Standing Order) நடைமுறைப்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

### 20. பதவி உயர்வுகள்

போக்குவரத்து மேற்பார்வையாளர்கள் மற்றும் தொழில்நுட்ப மேற்பார்வையாளர்களுக்கு வரையறுக்கப்பட்ட பணி விகிதமான 0.1க்கு உட்பட்டு கீழ்கண்டவாறு பதவி உயர்வுகள் தொடர்ந்து வழங்கப்படும்.

**1. போக்குவரத்துப் பிரிவு**

முதுநிலை போக்குவரத்து மேற்பார்வையாளர் 5% (Sr. Tr. Manger)

போக்குவரத்து மேலாளர் 10% (Tr. Manger)

போக்குவரத்து ஆய்வாளர் 25% (Tr. Inspector)

பரிசோதகர்/ஓட்டுநர் பயிற்சி ஆசிரியர் 60% (நடத்துவர் பிரிவு 40% ஓட்டுநர் பிரிவு 20%)

**2. தொழில்நுட்ப பிரிவு**

Senior AE/AE/JE 50%

பணிமனை கண்காணிப்பாளர் 5% (Workshop Supdt.)

பொது முதலாள் 15% (General Forman)

முதலாள் 30% (Forman)

மேலும், காலிப்பணியிடம் ஏற்படும்பொழுது முதுநிலை வரிசைப்படி பணிமூப்பு பட்டியல் (Panel) தயாரித்து தகுதிகளின் அடிப்படையில் (தகுதிக்காண் பருவம் உட்பட) பரிசீலித்து உடனுக்குடன் பதவி உயர்வு வழங்கப்படும்.

தொழில்நுட்பப் பணியாளர்களாக பணியில் சேர்ந்து பகுதி நேர படிப்பில் (தொலைதூரக் கல்வி நீங்கலாக) அங்கீகரிக்கப்பட்ட பட்டய படிப்பு முடித்திருந்தால் இளநிலை பொறியாளர் பணிக்காலியிடம் ஏற்படும்போது நடைமுறையில் உள்ள விதிகளின்படி பணிமூப்பு அடிப்படையில் இளநிலை பொறியாளராக பதவி உயர்வு வழங்கப்படும்.

**21. திருமண முன்பணம்**

பெண்/ஆண் தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர்களின் மகள் மற்றும் மகன் திருமணத்திற்கு, திருமண முன்பணமாக ரூ. 50,000/-லிருந்து ரூ. 1,00,000/-ஆக உயர்த்தி வழங்கப்படும். இம்முன்பணத் தொகை விதிமுறைகளுக்குட்பட்டு வழங்கப்படும்.

**22. பண்டிகை முன்பணம்**

தற்போது வழங்கப்பட்டு வரும் பண்டிகை முன்பணம் ஆண்டொன்றுக்கு ரூ. 20,000/- ஆக உயர்த்தி வழங்கப்படும்.

**23. கல்வி முன்பணம்**

கல்வி முன்பணமாக தற்சமயம் ஆண்டொன்றுக்கு வழங்கப்பட்டு வரும் ரூ. 5,000/- விதிமுறைகளுக்குட்பட்டு தொடர்ந்து வழங்கப்படும்.

**24. கல்வி உதவித்தொகை**

ஆண்டொன்றுக்கு ஒரு குழந்தைக்கு ரூ. 250/- வீதம் இரண்டு குழந்தைகளுக்கு தொடர்ந்து வழங்கப்படும்.

**25. குடும்ப இலவச பயணச் சலுகை**

தொழிலாளர்களின் செயல்திறனை ஊக்குவிக்கும் பொருட்டு பணியிலிருக்கும் போக்குவரத்துக் கழக தொழிலாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் குடும்ப இலவச பயணச் சலுகைக்கான 5,500 கிலோ மீட்டர் விதிமுறைகளுக்குட்பட்டு தொடர்ந்து வழங்கப்படும்.

தொழிலாளர்களின் அவர்தம் குடும்பத்துடன் குடும்ப இலவச பயணச் சலுகையை பயன்படுத்தி தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மற்றும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக இருக்கை வசதி, இருக்கை மற்றும் படுக்கை வசதி, படுக்கை வசதி மற்றும் குளிர்சாதனப் பேருந்துகளில் பயணம் செய்யும் போது அதற்குரிய வித்தியாசப் பயணக் கட்டணத்தை செலுத்தி பயணம் செய்ய அனுமதிக்கப்படும். தவிர்க்க முடியாத காரணங்களால் பயணம் மேற்கொள்ள இயலாத நிலையில் அந்த கிலோ மீட்டர் மீண்டும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

**26. தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு இலவச பஸ் பாஸ்**

கல்லூரி கல்வி பயிலும் போக்குவரத்துக் கழக பணியாளர்களின் குழந்தைகள், மாணவர் விடுதிகளில் தங்கி பயில்வார்களேயானால் அவர்கள் விடுதியிலிருந்து தங்கள் வீட்டிற்கு சென்று வர தற்போது ஒரு ஆண்டுக்கு பத்து தடவைகள் இலவச பஸ் பாஸ் வழங்கப்பட்டு வருவது தொடர்ந்து வழங்கப்படும்.

தொழிலாளர்கள் பணியில் உள்ள போது அவர்களது பிள்ளைகளுக்கு வெளியிடங்களில் மேற்கல்வி பயில இலவச பேருந்து பயண சலுகை (Free Bus Pass) நிர்வாகத்தால் வழங்கப்பட்டு வெளியிடங்களில் மேற்கல்வி பயின்று வரும் வேளையில் தொழிலாளர் ஓய்வு பெற்றால் / இறந்தால், ஓய்வு பெற்ற / இறந்த ஆண்டுடன் இலவச பேருந்து பயண சலுகையை உடனடியாக நிறுத்தம் செய்யாமல் கல்வி காலம் (Course Period) முடியும் வரை தொடர்ந்து வழங்கப்படும்.

**27. ஈமச்சடங்கு உதவி தொகை**

தற்போது தொழிலாளர்களின் ஈமச்சடங்கு செலவுகளுக்காக வழங்கப்பட்டு வரும் ரூ. 3,000/- தொடர்ந்து வழங்கப்படும்.

**28. நன்னடத்தைப் பரிசு**

கூடுதல் வருவாய் ஈட்டுதல், பயணிகளிடம் சிறப்பாக பணிபுரிதல், பணியை சிறப்பாக செய்வது போன்ற செயல்களுக்காக பரிசுகள் வழங்கப்பட்டு வருவது தொழில்நுட்பப் பணியாளர்கள் உள்ளடங்கிய அனைத்து தொழிலாளர்களுக்கும் தொடரப்படும்.

**29. பயணப்படி**

அரசாணை (நிலை) எண். 307 (Finance (Pay cell) Department) நாள்: 13.10.2017-ன்படி, தற்பொழுது வழங்கப்பட்டு வரும் பயணப்படி தொடர்ந்து வழங்கப்படும்.

**30. விபத்து வழக்கு உதவி தொகை**

விபத்து வழக்குக்கு வழங்கப்படும் நீதிமன்ற வழக்கு செலவுக்காக (Legal Fees) சம்மந்தப்பட்ட தொழிலாளிக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் ரூ. 1,000/- விதிமுறைகளுக்குட்பட்டு தொடர்ந்து வழங்கப்படும்.

**31. பங்களிப்பு ஓய்வூதிய திட்டம் (CPS)**

2003-க்கு பிறகு பணியில் சேர்ந்தவர்களுக்கு கழக ஓய்வூதியம் வழங்குவது தொடர்பாக அரசின் நிலைபாட்டினை கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

**32. சர்வீஸ் வெய்ட்டேஜ்**

இதன் தொடர்பாக 1992 மற்றும் 2007 ஒப்பந்த ஷரத்துக்களின் அடிப்படையில் விதிமுறைகளுக்குட்பட்டு அதாவது தகுதியான பணிக்காலம், தினக்கூலி (Daily Paid) மற்றும் தொகுப்பூதிய காலம் (Training Period Including Compassionate Ground Training) உட்பட கணக்கில்

கொண்டு, ஆனால் LLP, Absent ஆகியன நீங்கலாக சர்வீஸ் வெயிட்டேஜ் கணக்கிட்டு வழங்கப்படும்.

**33. ஓய்வூதியம்**

அ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக ஓய்வூதிய நம்பகத்தில் ஏற்படும் நிதி பற்றாக்குறையை அரசு நிதி உதவியுடனும் மற்றும் போக்குவரத்துக் கழகங்களின் பங்களிப்புடனும் ஈடு செய்யப்படும்.

ஆ) ஓய்வூதிய பலன்களை வழங்க தேவைப்படும் நடவடிக்கைகளை எடுத்து உரிய காலத்தில் அளித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**34. குடும்ப நல நிதி (Family Benefit Fund)**

தற்பொழுது ஒவ்வொரு மாதமும் ரூ. 110/- பிடித்தம் செய்து இறந்த பணியாளரின் குடும்பத்திற்கு வழங்கப்படும் குடும்பநல நிதி ரூ. 5 லட்சம் என்பது விதிமுறைகளுக்குட்பட்டு தொடர்ந்து வழங்கப்படும்.

**35. ஓய்வறை, கழிவறை, உணவகம் ஆகியவை தரம் உயர்த்தப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.**

**36. ஒப்பந்த காலம்**

இந்த ஒப்பந்தம் 01.09.2023லிருந்து 31.08.2027 வரை நான்கு ஆண்டுகளுக்கு அல்லது 1947ம் ஆண்டு தொழிற்தகராறுகள் சட்ட விதிகளின்படி இவ்வொப்பந்தம் ரத்து செய்யப்படும் வரை சட்டப்படியாக செயல்பாட்டில் இருக்கும்.

**37. பொது**

அ) மேலே குறிப்பிட்ட சலுகைகள் தவிர முந்தைய ஊதிய ஒப்பந்தங்களில் வழங்கப்பட்ட இதர சலுகைகள் தொழிலாளர்களுக்கு தகுதிக்குட்பட்டு தொடர்ந்து வழங்கப்படும்.

ஆ) இந்த ஒப்பந்தத்தின் மூலமான பணப்பலன் நிலுவைத் தொகை 01.09.2024 முதல் கணக்கிடப்பட்டு 4 தவணைகளாக காலாண்டுதோறும் வழங்கப்படும்.

இ) இந்த ஒப்பந்தத்தின் வாயிலாக பயன்பெறும் அனைத்து தொழிலாளர்களும் நிர்வாகத்திற்கு முழுமையான ஒத்துழைப்பும், ஆதரவும் தருவதென்று ஏற்று கொண்டும் பொதுமக்களுக்கு சிறந்த போக்குவரத்து சேவையினை உறுதி செய்வதற்கும் ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் வாயிலாக போக்குவரத்துக் கழகங்கள் கடுமையான நிதிச்சுமையை ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தாலும் தொழிலாளர்களுக்கு மன நிறைவு ஏற்பட வேண்டும் என்பதற்காக இந்த ஒப்பந்தத்தின் மூலம் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளது.

ஆகையால் உற்பத்தித் திறன், செயல்திறன் வருகை மேம்பாடு மற்றும் ஆதாயநோக்கு ஆகியவற்றுடன் தொழிலாளர்கள் பணிபுரிந்து நிர்வாகத்திற்கு ஏற்பட்டிருக்கும் கூடுதல் நிதிச்சுமையை குறைக்க முயற்சி செய்ய வேண்டும். மேலும், இந்த ஒப்பந்தம் அமல்படுத்துவதால் ஏற்படும் நிதிச்சுமை மற்றும் தொடர்ந்து தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பணப்பலன்களை கருத்திற்கொண்டு நிர்வாக செலவினங்களை குறைத்திட சில நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியுள்ளது. இதனை கருத்திற் கொண்டு தொழிலாளர் தரப்பு பிரதிநிதிகள் நிர்வாகத்திற்கு உறுதுணையாக செயல்பட வேண்டும். இருதரப்பினரும் போக்குவரத்து இயக்கத்தில் பொருளாதார மேம்பாட்டினை கொண்டு வருவதற்கு முயற்சி செய்வதுடன் வேலை நிறுத்தம், கதவடைப்பு, திடீர் பணிநிறுத்தம் ஆகியவற்றை முழுவதுமாக தவிர்த்து பொது மக்களுக்கு மிகச் சிறந்த பயணிகள் போக்குவரத்தை உறுதி செய்ய வேண்டும்.

## National Coordination Committee of Electricity Employees & Engineers

**Date : 9th June 2025**

**CIRCULAR**

The National Coordination Committee of Electricity Employees and Engineers (NCCOEEE) met on 9th June 2025 at BTR Bhawan, New Delhi. Comrade Mohan Sharma presided over the meeting.

The meeting took a serious note over the ongoing privatisation process of UP Power Sector. The Employees and Engineers of UP Power Sector are struggling for last 194 days; NCCOEEE extends strong solidarity and support to the struggling UP Power sector employees. The meeting took following decisions for strict implementation by all the constitutents:

1. NCCOEE again requests UP Power department to roll-back the privatisation attempt. Any further escalation will be responded with strong actiopn all across the country. Power Sector employees under the banner of NCCOEE will continue to campaign rigorously in support of the UP struggle.

2. **A nationwide demonstration at all sub-stations/offices/power plants will be observed on 2nd July 2025 in support of the UP Power employees and engineers.** NCCOEE appeals all power workers to join the movement at lunch-hour on that day.

3. NCCOEEE congratulates the Samyukt Kisan Morcha (SKM) for actively supportng the struggle of the UP Power employees. **A joint convention of Power employees, farmers and other consumers will be held on 22nd June 2025 at Lucknow, UP.**

4. In spite of this continuous agitation, if the UP Power department desperately floats the tender of privatisation, the power employees and engineers will be compelled to go for immediate strike action all across the country. The Central and UP State Govts are requested to realize the gravity of the situation and take necessary steps to roll-back the privatisation.

5. The meeting discussed in detail about the status of the Private Sector smart metering throughout the country. NCCOEEE clearly reiterates that, this smart metering is nothing but a move for further privatisation of electricity sector. Spontaneous and organized resistances are erupting at several states and some State Govts. are putting a halt to the process assessing the mood of the people. **NCCOEEE asks its constituents to unitedly campaign against this private sector smart metering project.**

6. Now, the foremost task in front of the Power Sector employees and engineers is to make the 9th July Strike a great success. This NCCOEEE meeting discussed in detail about the preparation of the strike. The following decisions have been taken in this regard.

   a) All constituent federations of NCCOEEE will ensure the submission of Strike notice by all of their constituent unions on 15th June 2025.

   b) A review of the preparation of strike will be done on 18th June 2025 meeting of NCCOEEE at Kolkata, West Bengal.

c) To make the Strike historic and to campaign about the ongoing struggle of UP, the following regional conventions will be held.

| Date of Convention | Place | States involved |
|---|---|---|
| 18th June 2025 | Kolkatta | West Bengal, Bihar, Jharkhand and Odisha |
| 24th June 2025 | Chandigarh | Hayrana, Punjab, Chandigarh, Himachal Pradesh, Uttarakhand, J&K and Rajasthan |
| 30th June 2025 | Mumbai | Maharashtra and Gujarat |
| 1st July 2025 | Hyderabad | Andhra and Telangana |
| 4th July 2025 | Guwahati | Assam, Meghalaya and Tripura |
| **The Conventions should mobilise 300-400 participants; major mobilization should be from the host states. The constituent unions/associations should disttibute the quota for participations among themselves.** | | |

7. The Regional Committees of NCCOEEE should start functioning actively.

**All the above decisions should be circulated to the unions by the constituent federations of NCCOEEE. A copy of such circular should be send to NCCOEEE (nccoeee2000@gmail.com) for further coordination at State level.**

Issued by,

Sudip Dutta

**(Sudip Dutta)**
Convener

## அனல் மின்நிலையங்கள் - வேலை நேரம் - மாற்றம் கருத்துரு - 9A நோட்டீஸ்

**TAMILNADU POWER DISTRIBUTION CORPORATION LIMITED**

Secretariat Branch
144, Anna Salai,
Chennai - 600 002.

**Letter No. 13512/A9/A92/2022-6 dated : 26.05.2025**

From

Thiru **R. DEVARAJ,** M.Com.,
Secretary/TNPDCL
Chennai-600 002.

To

The General Secretary,
Tamil Nadu Electricity Workers Federation
The General Secretary,
Tamil Nadu Electricity Board Accounts and Executive Staff Union
The General Secretary,
Tamil Nadu Electricity Board Workers Progressive Union (LPF)

The General Secretary,
Central Organisation of Tamil Nadu Electricity Employees
The General Secretary,
Minsara Pirivu Anna Thozhir Sangam
The General Secretary,
Tamil Nadu Minvariya Janatha Thozhilalar Sangam
The General Secretary,
Tamil Nadu National Electricity Workers Federation (Xavier group)
The General Secretary,
Tamil Nadu National Electricity Workers Federation, (Swarnaraj group)
The General Secretary,
Tamil Nadu Electricity Board Engineers Sangam
The General Secretary,
Tamil Nadu Electricity Employees Congress
The General Secretary,
Tamil Nadu Electricity Board Thozhilalar Poriyalar Aykkiya Sangam
The General Secretary,
Tamil Nadu Electricity Board Engineers' Association
The General Secretary,
Tamil Nadu Electricity Board Finance & Accounts Officers Association
The General Secretary,
Bharathiya Electricity Employees Federation
The General Secretary,
Tamil Nadu Electricity Board Card Billing Staff Union
The General Secretary,
Tamil Nadu Electricitry Board Dr. Ambedkar Employees Union
The General Secretary,
Tamil Nadu Electricity Board Engineers Union
The General Secretary,
Tamil Nadu Electricitry Board Employees Federation
The General Secretary,
Tamil Nadu Electricity Board Paatali Thozhir Sangam.

Sir,

***Sub :*** ***TNPDCL - Holidays - Request of the certain Trade Unions to allow holidays on Second and Fourth Saturdays to the RWE/Employees in Thermal Power Stations - Issue of Form Rule 57 of the Tamil Nadu Industrial Disputes Rules Read with Section 9-A of I.D. Act 1947.***

***

I am to enclose a FORM 'N' issued under rule 57 notice of change read with the Tamil Nadu Industrial Disputes Rules, 1958 read with Section 9A of the Industrial Disputes Act 1947 to effect the changes specified in the Annexure enclosed herein for the conditions of Service applicable to workemen, in respect of matters specified in the Fourth Schedule to the said Act.

2. In this regard, I am to request you to offer your remarks, if any on the above matter within 21 days, so as to enable TNPDCL to take decision in this matter.

Yours faithfully,
**(R. RUKMANI)**
Deputy Secretary/Administration for Secretary

**TAMIL NADU POWER DISTRIBUTION CORPORATION LIMITED**

Secretariat Branch
144, Anna Salai,
Chennai-2.

**Form "N"**
**(See Rule 57)**
**Notice of change of service conditions proposed by the Employer**

| | | |
|---|---|---|
| Name of Employer Corporation | : | Tamil Nadu Power Distribution Corporation Limited |
| | | Tamil Nadu Power Generation Corporation Limited<br>Tamil Nadu Green Energy Corporation Limited<br>and<br>Tamil Nadu Transmission Corporation Limited |
| Address | : | 144, Anna Salai, Chennai - 600 002. |

**Dated the Day of 26th May 2025**

As per orders of CMD, In accordance with section 9A of the Industrial Disputes Act, 1947 (Central Act XIV of 1947), the undersignes hereby give notice to all concerned that it is the intention of the TNPDCL, TNPGCL, TNGECL & TANTRANSCO, to effect the changes specified in the Annexure to this Form, in respect of the conditions of service applicable to workmen for the matters specified in the Fourth Schedule to the said Act.

**Deputy Secretary/ Administration**
**TNPDCL**

Encl : As above

## Annexure

**Proposal for Modification of working Hours of NCTPS-I, II & III, MTPS - I&II, and TTPS**

The existing working hours of General shift in all Thermal Power Stations from Monday to Friday is 08.30 am to 05.30 pm (12.30 pm to 1.30 pm one hour-Lunch break). Total working hour is 8 hours. In all Saturdays, working hours is 08.30 am to 05.30 pm. As per the request of certain unions to declare 2nd & 4th Saturday as Holiday to the aforesaid offices, it is proposed to modify the above office hours from 08.30 am to 5.45 pm with 1 hour lunch break (12.30 pm to 1.30 pm), as as to satisfy the 48 hours in a week as per the provisions of Factories Act. It is also proposed to declare the Second and Fourth Saturday as holidays. The extra working hours is 15 minutes / day.

**//True Copy// Forwarded by order//**

**Section Officer**

# தமிழ்நாடு மின் பகிர்மான கழகம்

செயலகக்கிளை,
144, அண்ணாசலை, சென்னை - 600 002.

**படிவம் "N"**

**விதி 57-ஐப் பார்க்கவும்**

**வாரியப் பணி முறைகளில் செய்யவுள்ள மாற்றம் பற்றிய அறிவிப்பு**

| | | |
|---|---|---|
| வேலையளிப்பவர் பெயர் | : | தமிழ்நாடு மின்பகிர்மான கழகம்<br>தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம்<br>தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழகம்<br>மற்றும் தமிழ்நாடு மின்தொடரமைப்பு கழகம் |
| முகவரி | : | 144, அண்ணாசாலை,<br>மின்வளாகம், சென்னை-600 002. |

**2025ம் ஆண்டு மே 26**

தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்களின் ஆணைக்கிணங்க 1947-ம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டம் பிரிவு 9A மற்றும் நான்காவது அட்டவணையின் படியும் (Fourth Schedule) வாரியப் பணி முறைமைகளில் மாற்றம் செய்யும் பொருள் தொடர்பாக, 1958-ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் தகராறு விதிகளின்படி தொழிலாளர்களுக்குப் பொருந்தும் பணிமுறைமைகளில், தமிழ்நாடு மின்பகிர்மான கழகம், தமிழ்நாடு மின்உற்பத்தி கழகம், தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழகம் மற்றும் தமிழ்நாடு மின்தொடரமைப்பு கழகம் செய்ய எண்ணியுள்ள பின்இணைப்பில் சொல்லப்பட்டுள்ள மாற்றம் குறித்து தொடர்புடைய எல்லோருக்கும் இதன் மூலம் முன்னறிவிப்பு கொடுக்கப்படுகிறது.

**துணைச் செயலாளர்/நிர்வாகம்**
**தமிழ்நாடு மின்பகிர்மான கழகம்**

**இணைப்பு**

**அனைத்து அனல் மின்நிலையங்களின் அலுவலங்களின் பணி நேரம் மாற்றம் குறித்து உத்தேசம் பின்வருமாறு:**

அனைத்து அனல் மின்நிலையங்களிலும் தற்போதுள்ள வேலை நேரம் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 08.30 மணி முதல் மாலை 05.30 மணி வரை (மதியம் 12.30 மணி முதல் 01.30 மணி வரை ஒரு மணி நேரம் மதிய உணவு, இடைவேளை). மொத்த வேலை நேரம் ஒரு நாளைக்கு 8 மணி நேரம் அனைத்து சனிக்கிழமைகளில் காலை 08.30 மணி முதல் மாலை 05.30 மணி வரை நடைமுறையில் உள்ளது. மேற்கூறிய அலுவலகங்களுக்கு 2வது மற்றும் 4வது சனிக்கிழமைகளை விடுமுறை தினமாக அறிவிக்க சில தொழிற்சங்கங்களின் கோரிக்கையின்படி மேற்கண்ட அலுவலக நேரத்தை காலை 08.30 மணி முதல் மாலை 5.45 மணி வரை 1 மணி நேர உணவு இடைவேளையுடன் (மதியம் 12.30 முதல் 1.30 மணி வரை) மாற்றியமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது மற்றும் நான்காவது சனிக்கிழமைகளை விடுமுறையாக அறிவிக்கவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. தொழில் தகராறுகள் சட்டத்தின்படி மொத்த வேலை நேரம் ஒரு வாரத்திற்கு 48 மணி நேரம் இருக்க வேண்டும். எனவே, கூடுதல் வேலை நேரம் ஒரு நாளைக்கு 15 நிமிடங்கள் என மாற்றி அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

//உண்மை நகல்// உத்தரவின்படி// அனுப்பப்படுகிறது//

**பிரிவு அலுவலர்**

# ✉ பெடரேஷன் கடிதங்கள் ☐

நாள் : 17.06.2025

பெறுநர்:

**தலைவர்,**
தமிழ்நாடு மின் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை,
சென்னை - 600 002.

ஐயா,

**பொருள் : தொழிற்சங்கம் - கோரிக்கைகள் தொடர்பாக கடிதம் - பேச்சுவார்த்தை - உடுமலை மரபுசாரா எரிசக்தி மின்வட்டம் - பொன்னாபுரம் செயற்பொறியாளர் - செயல்பாடு - தொடர்பாக.**

**பார்வை : கடித எண் : 15/2023 தேதி : 31.07.2023 மற்றும் 24/2023 தேதி: 24.10.2023 நாளிட்ட கடிதம்.**

உடுமலை மரபுசாரா எரிசக்தி மின்வட்ட எங்களது கிளை செயலாளர் தொழிலாளர் பிரச்சினை குறித்து பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண்பதற்காக மேற்பார்வை பொறியாளரிடத்தில் கடிதம் அளித்துள்ளதில் குறிப்பிட்ட ஒரு சில கோரிக்கைகள் மீது தீர்வு காண்பதற்கு பதிலாக கோரிக்கைகள் தந்திருக்கக் கூடிய எங்களது எம்ப்ளாயீஸ் பெடரேஷன் கிளை செயலாளருக்கு பொன்னாபுரம் 230 கிவோ. துணை மின்நிலைய செயற்பொறியாளர் விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பி உள்ளார்.

தொழிலாளர் நல சட்டப்படி தொழிலாளர் பிரச்சினைக்கு தீர்வுகாண செயல்படும் அல்லது கோரிக்கை வைக்கும் தொழிற்சங்க பொறுப்பாளருக்கு விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பும் புதிய நடைமுறை மின்சாரவாரியத்தில் எந்த சட்டத்தில் இடம் இருக்கிறது என்பதும் எந்த அடிப்படையில் இதுபோன்று செயல்படுகிறார் என்பதும் கேள்விக்குறியாக உள்ளது.

மின்சார வாரிய சட்ட திட்டங்கள் குறித்தோ, தொழிலாளர் நல சட்டங்கள் குறித்தோ தொழிற்சங்கத்துடன் மேற்கொள்ள வேண்டிய நடைமுறை குறித்தோ எந்த அடிப்படையும் தெரியாதவராக உள்ளது மட்டுமல்ல தன்னை மிகப் பெரிய ஜாம்பவானாக கருதிக் கொள்வதும், தன் கீழ் பணியாற்றும் தொழிலாளர்களையும், அதிகாரிகளையும் அடிமைபோல் நடத்துவதையும் வழக்கமாக கொண்டுள்ளார்.

பார்வையில் கண்டுள்ள குறிப்பாணையை உடனடியாக மேற்கண்ட பொன்னாபுரம் செயற்பொறியாளர் திரும்ப பெற வேண்டும்.

தலைவர் அவர்கள் மேற்கண்ட செயற்பொறியாளரை தொழிலாளர் மற்றும் பொதுமக்கள் தொடர்பில்லாத இடத்திற்கு ஊர் மாறுதல் செய்திட தகுந்த உத்தரவிட வேண்டுகிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள,

**(A. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

★★★

## தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம்

செயற்பொறியாளர் அலுவலகம்,
230 கி.வோ.து.மி.நிலையம்,
பொன்னாபுரம்.

கு.எண்.செ.பொ./இ/பொ.புரம்/கோ.கமுக்கம்/அ.எண்:22 /25,தேதி.16.06.2025

பொருள்:- நிர்வாகம் - தவறான பரப்புரை -விளக்கம் கேட்பது - தொடர்பு.

பார்வை:- கடித எண் 15/2023 தேதி 31.07.2023 மற்றும் 24/2023 தேதி 24.10.2023 நாளிட்ட கடிதம்.

*****

தமிழ்நாடு எலெக்ட்ரிசிட்டி போர்டு எம்பிளாயிஸ் ஃபெடரேஷன் அமைப்பின், மரபுசாரா எரிசக்தி ஆதாரங்கள் வட்டம், உடுமலை கிளையின் செயலாளர், ஆகிய திரு. துரைராஜ், தங்களின் கடித எண் 15/2023 தேதி 31.07.2023மூலம் மேற்பார்வை பொறியாளர், இயக்கம், கோவை அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் திரு.ஈ.சந்திரன், இளமின் பொறியாளர், இரண்டாம் நிலை 230 கி.வோ. துணை மின் நிலையம், பொன்னாபுரம், அவர்களது மாற்று பணி ரத்து செய்த பின்பும், பணியாளரிடமிருந்து ஆதாயம் பெறப்பட்டு பணி செய்து வருகின்றார், என்பதை தங்களின் மேலான கவனத்திற்கு தெரிவிக்கிறோம் என எழுதியுள்ளீர்கள், மற்றும் கடித எண் 24/2023 தேதி 24.10.2023மூலம்,செயற்பொறியாளர், இயக்கம், பொன்னாபுரம், அவர்களுக்கு எழுதிய கடிதத்தின் வாயிலாக பொன்னாபுரம் கோட்டத்தில், காற்றாலை பயனாளர்கள் மூலம் பங்களிப்புடன் மின் சாதனங்கள் சரி செய்யப்பட்டது, இந்நிலையில் பொன்னாபுரம் கோட்ட செயற்பொறியாளர் அவர்களின் பேச்சுக்கள், அனைத்து பணியாளர்களையும் ஊழலுக்குள் துணை போகின்றதாக இருக்கின்ற போலும் பேசி வருவதை, நிர்வாகத்திற்கு தெரியப்படுத்தவும் மற்றும் உரிய நடவடிக்கை எடுத்திடவும் என எழுதியுள்ளீர்கள். இந்த இரண்டு கூற்றுக்களும் வாரிய நடத்தை விதி 19(xxi) முறையற்றதாக தெரிய வருகிறது. எனவே மேற்கண்ட கூற்றுகளின் ஆதாரங்களை, தகுந்த ஆவணங்களுடன், இக்கடிதம் கிடைக்கப்பெற்ற ஏழு தினங்களுக்குள் இவ்வலுவலகத்திற்கு சமர்ப்பிக்க அறிவுறுத்தப்படுகிறது. தவறும் பட்சத்தில் தங்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

செயற்பொறியாளர்,
230 கி.வோ.து.மி.நிலையம்,
பொன்னாபுரம்

பெறுதல்

திரு.K.துரைராஜ், இளமின் பொறியாளர் 2ஆம் நிலை/ மருதூர் து.மி.நிலையம்.

நகல்: மேற்பார்வை பொறியாளர், இயக்கம்/கோவை அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப் படுகிறது.

நகல்: மேற்பார்வை பொறியாளர், ம.சா.எ.ச.ஆ/ உடுமலை அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப் படுகிறது.

நாள் : 11.06.2025

பெறுநர்:

**செயலாளர்,**
தமிழ்நாடு மின் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

ஐயா,

**பொருள் : 9Aநோட்டீஸ் - கருத்துகள் - தெரிவிப்பது - தொடர்பாக**

**பார்வை : Letter No.13512/A9/A92/2022-6 Dt.26.05.2025**

பார்வையில் கண்டுள்ள 9A அறிவிப்பின்படி இணைப்பில் உள்ள அனைத்து அனல் மின் நிலையங்களின் அலுவலகங்களின் பணி நேரம் மாற்றம் குறித்து உத்தேசமாக அளிக்கப்பட்டுள்ள முன் வரைவான அலுவலக நேரம் காலை 08:30 மணி முதல் மாலை 05:45 வரை மதிய உணவு இடைவேளை 12:30 முதல் 01:30 வரை உட்படவும், இதன் வழியாக இரண்டாவது மற்றும் நான்காவது சனிக்கிழமை விடுமுறை நாளாகவும் அறிவிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளதில் எங்களுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை, முழுமையாக நடைமுறைப்படுத்தலாம் என்பதை இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள,

**(A. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

★★★

நாள் : 11.06.2025

பெறுநர்:

**தலைவர்,**
தமிழ்நாடு மின் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

ஐயா,

**பொருள் : மதுரை மின் வட்டம் (பெருநகர்) - தெற்கு கோட்டம் - செயற்பொறியாளர் அலுவலகம் செயல்பாடு - தொழிற்சங்கங்களின் கூட்டு முறையீடு - நடவடிக்கை மேற்கொண்டிட வேண்டுதல் - தொடர்பாக.**

மதுரை மாநகர் மின் வட்டத்திற்குட்பட்ட தெற்கு கோட்ட செயற்பொறியாளர் மற்றும் உதவி நிர்வாக அலுவலர் ஆகியோரின் செயல்பாடு, தொழில், மற்றும் தொழிலாளர் விரோத செயல்பாடுகளாக இருப்பதால் தொழிற்சங்கங்கள் தலையிட்டு சரிபடுத்திட வேண்டி மேற்பார்வை பொறியாளர் மதுரை மாநகர் மின் வட்டம் மற்றும் தலைமைப் பொறியாளர் (பகிர்மானம்) மதுரை ஆகியோரிடம் பலமுறை பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

பேச்சுவார்த்தையில் எவ்வித முன்னேற்றமும் இல்லாததால் கடந்த 17.04.2025 தேதியிட்ட கூட்டு முறையீட்டில் 06.05.25 மாலை ஆர்ப்பாட்டத்திற்கான அறிவிப்பு செய்துள்ளதின் பேரில் மேற்பார்வை பொறியாளரும், தலைமைப் பொறியாளர் பகிர்மானமும் தொழிற்சங்கங்களிடம் ஆர்ப்பாட்டம் நடத்திட வேண்டாமெனவும், பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வருகிறோம் என கேட்டுக் கொண்டதற்கிணங்க 06.05.2025 ஆர்ப்பாட்டம் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் இதுநாள்வரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் இருப்பதால் மீண்டும் ஆர்ப்பாட்டம் நடத்திட உள்ளதாக 17.04.2025 கூட்டு முறையீட்டில் கையொப்பமிட்டுள்ள சங்கங்கள் முடிவெடுத்திட உள்ளதாக தகவல் எங்களது TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் மதுரை மாநகர் கிளை செயலாளர் வழியாக எங்கள் கவனத்திற்கு வந்துள்ளது.

எனவே தலைவர் அவர்கள் தகுந்த உத்தரவிட்டு மதுரை மாநகர் மின் வட்டம் தெற்கு கோட்டத்தில் தொழிலாளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வருவதற்கு தெற்கு கோட்ட செயற்பொறியாளர் மற்றும் உதவி நிர்வாக அலுவலர் மீது தொழிற்சங்கங்களின் சார்பாக கூட்டு முறையீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள புகார்களின் மீது விசாரணை நடத்தி பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வந்து தொழில் நல்லுறவு பேணிட மேற்பார்வை பொறியாளர் மதுரை (மாநகர்) மற்றும் தலைமைப் பொறியாளர் (பகிர்மானம்) மதுரை ஆகியோருக்கு தகுந்த உத்தரவிட வேண்டுகிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள,

**(A. சேக்கிழார்)**

பொதுச்செயலாளர்

★★★


## மணமக்கள் நீடூழி வாழ வாழ்த்துகிறோம்



**கோவை மாநகர் மின்வட்ட இணை செயலாளர் திரு. P. குப்புராஜ் அவர்களின் மகன் திருமணம் 18.05.2025 அன்று நடைபெற்றது. ரூ. 5000/- நன்கொடை அளித்துள்ளார்.**



**மாநில இணை செயலாளர் திரு. G. பாலசுப்ரமணியன் அவர்களின் புதல்வி திருமணம் 05.06.2025 அன்று நடைபெற்றது. ரூ. 25,000/- நன்கொடை அளித்துள்ளார்.**



**துணை பொதுச்செயலாளர் K. நாராயணமூர்த்தி அவர்களின் புதல்வி திருமணம் 06.06.2025 நடைபெற்றது. ரூ. 50,000/- கட்டிட நிதி அளித்துள்ளார்.**

*- ஆசிரியர்*

## பயணப்படி - 75%லிருந்து 100% - அரசாணையை அமல்படுத்தும் உத்தரவு

**TAMILNADU POWER DISTRIBUTION CORPORATION LIMITED**

(ABSTRACT)

Travelling Allowance - Minimizing the financial stress arising out of COVID 19 - Reduction in the quntum of Daily Allowance by 25% - Restruction revoked - Orders issued by the Government - Adoption in TNPDCL - Orders-Issued.

---

**(SECRETARIAT BRANCH)**

**(Per) FB TNPDCL Proceedings No. 25,** **Dated the 20th June, 2025**

Aani - 6, Visuwavasu Varudam,
Thiruvalluvar Aandu - 2056

**READ:**

1. G.O. (Ms) No. 249, Finance (Budget Generai-I) Department, dt. 21.05.2020.
2. From the Principal Secretary to Government/Energy (B2) Department, Letter No. 2564/B2/2020-1, dated 14.09.2020.
3. Memo No. 39105/A18/A181/2018-5 (SB), dt. 22.12.2020.
4. G.O.Ms. No. 178, Finance (Budget General-I) Department, dt. 20.06.2022.

*****

**PROCEEDINGS :**

While clarifying certain points on allowing Travelling Allowance to the officials performing tours within the corportation limits, the Government in its letter second read above, and mentioned the following cost control measures imposed by the Government in view of huge shortfall in the receipts due to COVID-19 Pandemic and consequent measures to contain the pandemic as per G.O(Ms) No. 249, Finance (Budget General-I) Department, dated 21.05.2020:

(i) The permission for official travel should be given judiciously and restricted only to absolutely essential official requirements and regular review meeting can be organized through Video Conferencing and tele-conferencing in secure environment.

(ii) The permissible rates of Daily Allowance shall be reduced by 25%, Only 75% of eligible amount shall be allowed to be drawn subject to rounding off to next 10 rupees for all categories of officials/non-officials.

The said Government's letter was communicated to all the officers of TANGEDCO (now TNPDCL) for strict adherence - vide Memo. third read above.

2. Later on, the restrictions imposted in G.O. first read above, were partially relaxed by the Government - vide G.O. fourth read above, wherein among others, the restriction on "Allowing full Daily Allowance and restricting it by 25%" has been completely relaxed and certain austerity measures were ordered to be continued. After through examination of the issue, it has been decided to relax the said restriction in TNPDCL.

3. Accordingly, it is hereby ordered that the restriction imposed on allowing Daily Allowance to 75% (25% cut) in the Travelling Allowance bills of employees of TNPDCL (erstwhile TANGEDCO), be relaxed with effect from 20.06.2022, i.e. the date of issue of G.O. fourth read above.

**(BY ORDER OF THE BOARD)**

**J. RADHAKRISHNAN**
Chairman and Managing Director

## எம்ப்ளாயீஸ் பெடரேஷனுக்கு வாரியம் அளித்த அங்கீகாரத்திற்கான உத்தரவு

**(ABSTRACT)**

TNPDCL - Labour - Recognition to the Tamil Nadu Electricity Board Employees Federation (Reg. No. 3600/CNI) - Orders - Issued.

---

**(SECRETARIAT BRANCH)**

**(Per) FB TNPDCL Proceedings No. 22,** **Dated the 19th June, 2025,**
Aippasi-9, Krothi Varudam,
Thiruvalluvar Aandu-2055.

**Read:**

Ref : 1) Board's Proceedings Ms.No. 2822, dated : 31.12.1963.

2) From the General Secretary of Tamil Nadu Electricity Board Employees Federation (Reg.No. 3600/CNI), Letter dated : 21.04.2023.

3) Minuts of the 129nd Board Meeting of TNPDCL held on 04.06.2025 (Item No. P-15)

*****

**PROCEEDINGS:**

The General Secretary / Tamil Nadu Electricitry Board Employees Federation has requested for recognition to their Union (Registration No. 3600/CNI) in Tamil Nadu Power Distribution Corporation Limited in pursuant of the Registration under the Trade Unions Act, 1926.

2. The request of the Tamil Nadu Electricity Board Employyes Federation has been examined carefully by the Board and the request of the Tamil nadu Electricity Board Employees Federation is accepted and the Board of Tamil Nadu Power Distribution Corporation Limited hereby accord recognition to Tamil Nadu Electricity Board Employees Federatiopn (Reg. No. 3600/CNI) as a Union of Industrial Employees of the Tamil Nadu Power Distribution Corporation Limited under the Tamil Nadu Electricity Board's Rules for recognition contemplated in B.P.Ms. No. 2822, dated 31.12.1963, subject to the conditions in the aforesaid Board's Proceedings.

**(BY ORDER OF THE BOARD)**

**J. RADHAKRISHNAN**
Chairman-Cum-Managing Director

| நான்மணிக்கடிகை பாடல். 35 | தமிழறிஞர் வை.வேதரெத்தினம் உரை! |
|---|---|

## பாடல் எண்: (35) அந்தணரின் நல்ல பிறப்பில்லை!

அந்தணரின் நல்ல பிறப்பில்லை; என்செயினும்
தாயிற் சிறந்த தமரில்லை; யாதும்
வளமையோ டொக்கும் வனப்பில்லை; எண்ணின்
இளமையோ டொப்பதூஉ மில்.

**கருத்துரை:**

செந்தண்மை பூண்டொழுகும் அந்தணர் எனப்படும் நன்மக்களைப் போல் உயர் பிறவி இவ்வுலகில் வேறு ஏதுமில்லை!

தன்னை எத்துணைக் கண்டித்து ஒறுத்தாலும் கூட, குழந்தைக்குத் தாயைவிட மேலான உறவினர் யாருமேயில்லை!

வறுமையே தெரியாமல் செல்வச் செழுமையோடு வாழும் வாழ்க்கைக்கு நிகரான நற்பேறு வேறு எதுவும் இல்லை!

ஆராய்ந்து பார்த்தால், இளமைப் பருவ வாழ்க்கைக்கு இணையானதும் இவ்வுலகில் இல்லவே இல்லை!

**அருஞ்சொற்பொருள்:**

அந்தணரின் = அந்தண்மை உடையார் பிறவியைப் போல; நல்ல பிறப்பு இல்லை = உயர்ந்த பிறவி வேறில்லை; என் செயினும் = தனக்கு என்ன தீமையைச் செய்தாலும்; தாயின் = தாயைப் போல; சிறந்த தமர் இல்லை = மேலான உறவினர் எவருமில்லை; வளமையோடு = செல்வ வாழ்க்கையோடு; ஒக்கும் வனப்பு = ஒப்பான அழகு; யாதும் இல்லை = மற்றெதுவும் இல்லை; எண்ணின் = ஆராய்ந்து பார்த்தால்; இளமையோடு ஒப்பதும் = இளமைப் பருவத்தோடு ஒப்பாவதும்; இல் = பிறிதொன்று இல்லை.

**சந்தாதாரர்கள் - உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் கவனத்திற்கு**

நமது சங்க இதழான **''எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்''**-ல் தங்களது கருத்துகள், கட்டுரைகள், தங்கள் வட்டத்திற்குட்பட்ட தொழிலாளர்கள் மற்றும் சங்கத்திற்கான செய்திகளை கீழ்க் கண்ட முகவரிக்கு அனுப்பி வைத்திடுவீர்!

**நிர்வாக ஆசிரியர்,**
**TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்**
39/101, சிங்கண்ணா தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002.
✆ : 9841446621 : 8939152361
tnebemployeesfederation3600@gmail.com

**குறிப்பு :** *செய்திகள் வெளியிடுவது ஆசிரியக் குழுவின் முடிவிற்குட்பட்டது.*

# எதிர்மறை எண்ணங்களை எப்படி கையாள்வது?

சிவநாச்சியார்



*கடந்த இதழ் தொடர்ச்சி...*

''மனிதனுக்கு எங்கே நிம்மதி எதிலே நிம்மதி கிடைக்கிறது? என்பதை பற்றி சிந்திப்போமா!

நிம்மதி என்றாலே எங்கே நிம்மதி எங்கே நிம்மதி அங்கே எனக்கோர் இடம் வேண்டும் என்ற சிவாஜி கணேசன் அவர்களின் சினிமா பட பாடல் வரிகள் தான் நினைவுக்கு வருகிறது.

நிம் + மதி = நிம்மதி. நிம் என்றால் அமைதி, மதி என்றால் அறிவு என்று பொருள்.

இளமை காலத்தில் அறிவை வளர்த்துக் கொள்ள கல்வி கற்கிறோம். நடுத்தர வயதில் பொருளாதாரத்தை உயர்த்திக் கொள்வதற்காக ஓடி ஓடி உழைக்கிறோம். வயதான காலத்தில் தான் நிம்மதியைத் தேடி அலைகிறோம். அப்போதும் நிம்மதி கிடைக்கிறதா? என்றால் இல்லையே!! மனம் அமைதி அடைகிறதா? என்றால் இல்லையே! அறிவு (மதி) அமைதி பெறும் போது தான் நிம்மதி கிடைக்கும். அது எப்படி என்று தெரிந்து கொள்வோம்.

நிம்மதி என்பது பொருளா, பணமா, நகையா, ஆபரணமா, வெள்ளிப்பாத்திரமா நல்ல வேலையா, நிலமா, வீடா, நாம் பெற்ற குழந்தைகளா, கட்டின மனைவியா (அ) புருஷரா, தாய் - தந்தையா, நல்ல உணவா? எதுங்க நமக்கு நிம்மதியை தருகிறது. இவற்றில் எதுவுமே கிடையாது. மூன்று வேளையும் சுவையான சாப்பாடு கிடைத்தால் நிம்மதியாக இருப்பேன் எதுவுமே கேட்கமாட்டேன் நிம்மதியாக இருப்பேன் என்று உங்களால் (நம்மால்) உறுதியாக சொல்லமுடியுமா?

ஒரு முறை புத்த துறவி தலாய்லாமா அவர்களிடம், ''இந்த உலகத்தில் உங்களை ஆச்சரியப்படுத்திய விசயம் எது?'' என்று கேட்கும் போது அவர் சொன்னார், ''மனிதன் தான் என்னை இவ்வுலகில் ஆச்சரியப்பட வைத்தது. மனிதன் பொருளையும் பணத்தையும் சம்பாதிப்பதற்காக நிம்மதியையும் முக்கியமாக ஆரோக்கியத்தையும் இழந்து விடுகிறான். பின் இழந்த ஆரோக்கியத்தை பெற சம்பாதித்த பணத்தையும் பொருளையும் செலவிடுகிறான். மனிதன் எதிர்காலத்தை எண்ணி எண்ணி நிகழ்காலத்தை தியாகம் செய்கிறான். நிகழ்காலத்திலும் வாழாமல் எதிர் காலத்திலும் வாழாமல் மனிதன் வாழாமலே இறக்கிறான்'' என்று கூறுகிறார்.

எனக்கு இன்னது கிடைத்துவிட்டால் நான் நிம்மதியாக இருப்பேன் மகிழ்வாக இருப்பேன் என்று யாராலும் சொல்ல முடியுமா? இன்னது கிடைத்துவிட்டால் நிம்மதி என்று சொன்னால் அது எது என்று அடுத்த கேள்வி எழும். அந்த இன்னது எது என்று தெரியாமல் தான் அனைவரும் இயந்திரத்தனமான உலகத்தில் ஓடிக்கொண்டே இருக்கிறோம். வாழ்வில் எல்லாம் இருப்பவர்கள் நிம்மதியாக இருக்கிறார்களா என்று பார்த்தால் இல்லையே இன்னும் வேண்டும் இன்னும் வேண்டும் என்று தானே மனம் நினைக்கிறது. போதும் என்று மனம் எண்ணியதுண்டா?

கடல் நீர் ஆவியாகி மேகமாக உருவெடுத்து பின் மழையாக பொழிகிறது. மழை பெய்யும் இடம் காடு மலையாக இருந்தால் அவை (மழைநீர்) உருண்டு புரண்டு காடு மலையோடு கல் புல் என அனைத்தையும் அடித்துக் கொண்டு அதன் வேகத்திற்கு தகுந்தவாறு இழுத்து கொண்டு செல்கிறது. அருவியாக, நீரூற்றாக, காட்டாறாக, ஆறாக வேகமடுத்து பின் கடலில் சங்கமம் ஆகிறது. அதுவரை ஆரவாரமாக இருந்த மழைநீர் கடலில் சங்கமம் ஆகும் போது தான் தன் பூரணநிலையை நிம்மதி அடைகிறது. மழைநீர் எங்கு புறப்பட்டதோ அங்கே சங்கமம் ஆகும் போது தான் அமைதி பெறுகிறது. அது போல தான் மனித வாழ்க்கையின் நிம்மதி. மனிதன் எங்கிருந்து தோன்றினானோ அவனோடு இறைவனோடு இணையும் போது அவனை பற்றி உணர்ந்து கொள்ளும் போது தான் மனித வாழ்க்கை பூரணம், முழுமை பெறும். **'நான் யார்?'** என்ற கேள்விக்கான பதில் கிடைத்துவிட்டால் அங்கே நிம்மதி கிடைத்துவிடும். மனம் அமைதி பெறும்.

மனித வாழ்க்கை ஒரு வட்டம். எங்கு ஆரம்பிக்கப்பட்டதோ அங்கேயே சென்று அடையும் போதுதான் முழுமை பெறும்.

***''கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்***
***நற்றாள் தொழாஅர் எனின்.''***

குறளின் நெறி – தூய அறிவின் வடிவான இறைவனின் திருவடிகளை தொழாமல் இருந்தால் ஒருவன் அவன் கற்ற கல்வியினால் பயன் ஒன்றும் இல்லை. வாழ்க்கை நலக்கல்வியை கற்றுக் கொண்டால் நாம் காணும் அனைத்தும் இறைவனின் மறு உருவம் என்று எண்ண தோன்றும். தீங்கிழைக்கும் எண்ணம் தோன்றாது. அறம் வழியில் செயலாற்ற மனம் தூண்டும். மனம் நிம்மதி பெறும்.

## மனித வாழ்வின் குறை

எனக்கு வாழ்க்கையில் எல்லோருக்கும் நிறைவாய் இருக்கிறது என்று சொல்லதான் ஆசை. ஆனால் முடிகிறதா? ஏதோ ஒன்றை மனம் தேடிக்கொண்டே உள்ளது.

ஒருவருக்கு வீடு நிறைய பிள்ளை இருக்கும்! ஆனால் வருமானம் பற்றாக்றையாக இருக்கும்!

ஒருவருக்குப் பிள்ளை இருக்காது! ஆனால், வசதி வீடு நிரம்ப இருக்கும்! ஒருவருக்குச் சாப்பிட ஆசை இருக்கும்! ஆனால், உண்ண உணவு இருக்காது! ஒருவருக்கு விரும்பிய உணவு கிடைக்கும்! ஆனால் சாப்பிட முடியாத அளவு நோய் இருக்கும்!

நடுத்தர வயதில் உடலில் தெம்பும் இருக்கும் காசும் இருக்கும். ஆனால் நேரம் இருக்காது. வயதான காலத்தில் நிறைய நேரம் இருக்கும் காசும் இருக்கும். ஆனால் உடலில் தெம்பு இருக்காது.

இறைவன் கொடுக்க நினைப்பதை மனிதன் தடுக்க முடியாது. இறைவன் தடுக்க நினைப்பதை மனிதன் கொடுக்க முடியாது. குறைகளை நிறைவாக ஏற்றுக்கொண்டு எதுவாக இருந்தாலும் சரி எனக்கென்று விதிக்கப்பட்டதை மனதார ஏற்றுக்கொள்கிறேன். அதில் குறைகள் இருந்தாலும் நான் நிறைவாக மாற்றிக் கொள்வேன் என்ற மனநிலைக்கு ஒவ்வொருவரும் வந்துவிட்டால் வாழ்க்கை மிகவும் நல்ல இனிமையாக இருக்கும். நிறை குறை ஒவ்வொருவரின் மனநிலையைப் பொறுத்தது.

***''அறன்நோக்கி ஆற்றுங்கொல் வையம் புறன்நோக்கிப்***
***புன்சொல் உரைப்பான் பொறை.''***

ஒருவன் நேரில் இல்லாத போது பழித்து கூறுபவனது உடலை இந்த உலகம் அறத்தை எண்ணி சுமந்து கொண்டிருப்பது போலாகும்.

□

## 01.12.2019 - ஊதிய உயர்வு - பணப்பயன் - மறுவிருப்பம் தெரிவிக்க அனுமதிக்கும் உத்தரவு

**TAMILNADU POWER DISTRIBUTION CORPORATION LIMITED**
**(ERSTWHILE TANGEDCO)**

Secretariat Branch,
N.P.K.R.R. Maligai,
144, Annasalai,
Chennai - 600 002.

**Memo. (Per). No. 3457/A16/A161/2025-1, Dated : 17.04.2025.**

***Sub :*** Establishment - TNPDCL - Revision of Wages/Pay effective from 1.12.2019 - Permitting Employees / Officers to exercise revised option to come over to the revised scales of pay 2019 - Orders - Issued.

***Ref*** : 1. (Per) FB TANGEDCO Proceedings No. 13 (SB) dated 24.05.2023
2. (Per) FB TANGEDCO Proceedings No. 14 (SB) dated : 24.05.2023.

****

According to Regulation 8 (2) of the erstwhile TANGEDCO Revision of Pay (Workmen) Regulations 2019/TANGEDCO Revision of Pay (Officer) Regulations 2019, ordered in the Board's Proceedings first and second cited, option to come over to revised scales of wages/pay should be exercised by the Workmen/Officers, within three months from the date of issue of the said orders and the option once exercised would be final.

2) It has been represented by the Unions/Associations that while exercising the Wage Revision option, some of the employees working in various Electricity Distribution Circles have chosen incorrect date on completion of 10 years (i.e.service weightage option). In some other circles after obtaining option from the employees, the pay fixation authorities have re-fixed the pay incorrectly to the employees. Due to incorrect fixation, the Audit Party had issued Audit Slips and instructed to recover the excess payment from the concerned employees. In such case, recovery of huge amount at this stage causes hardship to the employees. Hence, the Unions/Associations have requested to permit revised option for the employees during the 01.12.2019 Wage Revision as was done in the earlier wage revision. This request has been examined in detall and accepted.

3) After careful consideration, the following orders are issued:-

i. The Workmen/Officers who desire to revise their earlier option already exercised by them, as per the Board's Proceedings first and second cited, effective from 1.12.2019, **be permitted to exercise revised option upto 31.5.2025.**

ii. It is also hereby ordered that if the total arrears already paid due to fixation in the Revised scale of pay 2019 as per original option is more than the arrears payable under revised option, the pay fixing authorities may inform the individual to remit the excess amount (difference) to be recovered from him. After remittance of the excess amount from the individual, the pay drawing officer shall claim the revised pay admissible to the employees as per the revised option.

iii. If the total arrears already paid due to fixation of pay in the Revised scale of pay 2019 as per the original option is less than the arrears payable under revised option, the pay drawing officer shall claim the Revised pay admissible duly adjusting the amount already paid.

iv. If no arrear is payable to the individual under revised option, the individual shall remit the entire amount in one lumpsum so as to avail the benefit of revised option. If, the individual could not remit the entire arrears in one lumpsum, the revised option shall not be acted upon and the pay already fixed based on his earlier option shall be allowed to stand and the individual may be informed accordingly.

4) The revised option once exercised shall be final. If, no revised option is exercised within the time limit specified in para-3 (i) above, pay fixation allowed with reference to the original option will stand. No further extension will be allowed.

5) The Chief Engineers/Chief Financial Controllers/Superintending Engineers/Deputy Secretaries/ Chief Internal Audit Officer and other Officers will arrange to display the copy of this Memo.conspicuously in the notice Board of the Offices under their control.

6) The receipt of this Memo. should be acknowledged.

**(BY ORDER OF THE CHAIRMAN AND MANAGING DIRECTOR)**

**R. DEVARAJ**
Secretary

**நன்றி! நன்றி!! நன்றி!!!**

**19.06.2025 அன்று TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷனுக்கு அங்கீகாரம் வழங்கிய தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு நன்றி.**

**21.06.2025 அன்று TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் பொதுச் செயலாளரின் மின்சார வாரிய பணி நிறைவு பாராட்டு விழாவில் கலந்து கொண்டு வாழ்த்திய அனைவருக்கும் நன்றி**